INTERNATIONAL RESEARCH JOURNAL OF INDIA
ISSN 2454-8707 VOLUME-II,ISSUE-IV, DEC-2016

# தமிழ் இலக்கியங்கள் மற்றும் கல்விச் சிந்தனைகள்

முனைவர்.இரா.ஜெயஸ்ரீ
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பான்செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.



கருத்துரு

1950-இல் வகுக்கப்பட்ட இந்திய அரசியலமைப்பு ஒவ்வொரு மாநில அரசும் இன்னும் பத்து ஆண்டிற்குள் அடிப்படைக் கல்வியினைப் பதினான்கு வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

அறிவியல் கல்வி, மக்கள் தொகை மற்றும் சுற்றுச்சூழல் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான தேவை அதிகமாகிவிட்ட இச்சூழலில், தமிழ்மொழி இலக்கியங்கள் கல்வியின் இன்றியமையாமையை மிகவும் வலியுறுத்துகிறது.

நன்னெறி, இனியவை நாற்பது, புறநானூறு, திருக்குறள், நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு, திரிகடுகம், நாலடியார், நீதிநெறி விளக்கம், விவேகசிந்தாமணி, நன்னூல் போன்ற நூல்களில் கல்வி குறிந்த சிந்தனைகள் எவ்வாறு எடுத்தாளப்பாட்டுள்ளன என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

தமிழ் இலக்கியங்கள் கல்வியையும், ஆசிரியரையும் உயரிய இடத்தில் வைத்து பாராட்டியமை, அவர்கள் கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளித்துள்ளனர் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளமுடியும்.

கல்வியால் மட்டுமே உலகை மாற்ற முடியும் என்கின்ற எக்காத்துக்கும் பொருந்தும் உண்மையைத் தமிழ் இலக்கியங்கள் தெள்ளிதின் விளக்குவதை அறிய முடியும்.

மூவாயிரத்திற்கு மேற்பட்ட உலக மொழிகளுள் இன்றும் பல்வேறு வகைகளில் முதன்மையாக உள்ளது தமிழே. உணவையும்,மருந்தையும் விட இன்றியமையாதது தமிழ்.

நாட்டின் எதிர்காலக் குடிமக்கள் இன்றைய கல்விச் சாலைகளில் உருவாகின்றனர். அவர்களைச் சிறந்த குடிமக்களாக உருவாக்கும் பணியில் ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அந்த கல்வியின் சிறப்புகளைப் பற்றியும், கற்றல் முறைகள் பற்றியும் தமிழ்மொழி இலக்கியங்கள் பலவாறாகச் சுட்டிக் செல்கின்றன.

அனைவருக்கும் அடிப்படைக் கல்வி வழங்குவதின் அதி முக்கியத்துவத்தைப் பற்றிக் கலந்துரையாட ஜாம்டீயில் அனைவருக்கும் கல்வி 1990 உலக மாநாட்டின் பங்கேற்பாளர்கள் ஒன்றுகூடி அடிப்படைக் கற்றல் தேவைகள் என்ற தலைப்பிற்கான பிரகடனமும், சட்டமும் செயல்படுவது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தியச் சூழலில் அனைவருக்கும் கல்வியுரிமை வழங்கும் முறை, அவசியமாகிவிட்ட இன்றைய நிலையில் நமது தமிழ் இலக்கியங்கள் கூறும் கல்வி குறித்த சிந்தனைகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

### “நன்னெறி” கூறும் கல்வி

காஞ்சி மாநகரில் கி.பி.17 நூற்றாண்டில் குமாரசாமி தேசிகர் என்பாரின் மகனாகத் தோன்றிய சிவப்பிரகாசரால் எழுதப்பட்டது நன்னெறி, நாற்பது வெண்பாக்களால் ஆனது. ஈகை,அன்பு, கல்வி, இல்லறம், நட்பு, சினம் தவிர்த்தல் ஆகிய வாழ்வியல் நீதிகளை இந்நூல் கூறுகிறது.

### கல்வியின் சிறப்பு

கல்வி கற்காத மணிதன் கண்ணிருந்தும் குருடனாகவே கருதப்படுகிறான். கல்வி அறிவு பெற்ற ஒருவர்தான் எல்லாவற்றையும் அறிந்தவர் என்ற செருக்கு கொள்ளுதல் கூடாது என்பதை,

முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றமை என்று களியற்க (நன்னெறி-14)

என்கிறார்.

கல்வியை விடச் சிறந்த செல்வம் உலகில் வேறொன்றுமில்லை கல்வி, கற்றவருக்கு மிகுந்த புகழைக் கொடுக்கும் சென்ற இடமெல்லாம் சிறப்பைக் கொடுக்கும். மனம் தளரும்போது தன்னம்பிக்கை கொடுக்கும் கற்றவரின் மேன்மையைச் சிவப்பிரகாசர் கூறும்போது,

“பொன் அணியும் வேந்த: புணையாப் பெருங்கல்வி
மண்ணும் அறிஞரைத்தாம் மற்றொவ்வார் - மின்னுமணி
பூணும் பிற உறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணுங்கள் ஒக்குமோ காண்” (நன்னெறி-40) என்கிறார்.

### இனியவை நாற்பது கூறும் கல்வி

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் இடம் பெறும் இனியவை நாற்பது கல்வியின் தேவையை எடுத்தியம்புகிறது.

அறியாமை நீங்கி அறிவுபெற உதவும் கருவியே கல்வி. மனிதன் மனதில் புதைந்து

கிடப்பதை அகழ்ந்து எடுப்பதே கல்வி.
பிச்சை புக் காயினும் கற்றல் மிக இனிதே
நாளும் நவைபோகான் கற்றல் மிக இனிதே
கற்றார்முன் கல்வி உரைத்தல் மிக இனிதே

கற்றறிந்தோர் கூறும் கருமப்பொருள் இனிதே(இனியவை நாற்பது 1,3,16,20) என்று இனியவை நாற்பது கற்றலின் உயர்வைக் கூறுகிறது.

### புறநானுறு

கற்றல் மற்றும் கல்வி ஆகியன மனித வள மேலாண்மையின் முக்கியக் கூறுகள். ஏனெனில் இவையே ஒருநாட்டின் மனிதவளம் சிறக்கக் காரணமாகத் திகழ்பவை.

“உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே”
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே (புறம்.183) என்னும் பாடலில் வேறுபாடுகள் தெரிந்துள்ள நான்கு சாதிகளில் கீழ்ச்சாதியில் பிறந்த ஒருவன் கல்வி கற்றிருப்பான் என்றால், அவனைக் கீழ்ச்சாதியைச் சேர்ந்தவன் என்று பாராமல் மேல்சாதியைச் சேர்ந்தவன் அவனிடம் சென்று அவனை வணங்குவான் என்று கல்வியின் உயர்வு குறிப்பிடப்படுகிறது.

INTERNATIONAL RESEARCH JOURNAL OF INDIA
ISSN 2454-8707 VOLUME-II,ISSUE-IV, DEC -2016

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"(புறம்.194)

என்ற பாடலில் ஒவ்வொரு தந்தையும் தன் மகனை அறிஞர் அவையில் முன்னிலையில் அமரவைக்க கல்வியே அடிப்படைக் காரணம் எனலாம்.

### திருக்குறள்

உலகப் பொதுமறை என்றுவழங்கப்படும் திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. கல்வி எனும் அதிகாரத்தை வள்ளுவர் அமைத்து கல்வியின் பெருமைகளை போற்றிப் புகழ்கின்றார்.

குற்றமற்ற நூல்களைக் கற்று அதன்படி நடக்கவேண்டும் எண்ணும், எழுத்தும் இரண்டு கண்களைப் போன்றவை. கற்றவர்கள் கண்ணுடையவர்கள், கல்லாதவர்கள் முகத்தில் புண்ணுடையவர்கள், கல்வி கற்றவரே உயர்ந்தவர்.

தொட்டனைத் தூறும் மணற்கேனி மாந்தருக்குக்
கற்றனைத் தூறும் அறிவு (குறள்).

என்ற குறளில் நிலத்தினைத் தோண்டத் தோண்ட நீர் சுரப்பது போல கற்கக் கற்க அறிவு வளரும்,கற்றவருக்கு எந்த நாடானாலும், ஊரானாலும் தன்னுடைய நாடாகும். ஒரு பிறப்பில் கற்ற கல்வி ஒருவருக்கு ஏழு பிறப்பிலும் உதவும், ஒருவனுக்கு அழிவு இல்லாத செல்வம் கல்வியே ஆகம்.

கேடில் விழிச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்வை எவை.

### பழமொழிகள்

எழுத்தால் அமைந்த இலக்கியங்கள் மட்டுமல்லாது எழுத்தே இல்லாத பலமொழிகளில் செவிவழியாக இலக்கியங்கள் நிலைபெற்றிருக்கின்றன.

வெளிநாடுகளிலும்,இத்தகைய காப்பியங்கள் வாய்வழியே வளர்ந்தமையை பௌரா (டீழறசய) என்பவர் ஆராய்ந்துள்ளார்.

தமிழகத்தில் ஏட்டில் எழுதப்படாமல் மக்கள் பேச்சு வழக்கிலேயே சில இலக்கிய மொழிகள் நிலவுகின்றன.

பொருள் பொதிந்த பழமொழிகள் அவற்றின் பழைமைச் சிறப்பால் முதுமொழிகள் என்றும் வழங்கப்படுகின்றன.

சிறுவயதில் கற்கப்பட்டு வாழ்நாள் முழுவதும் பயன்பட்டுவரும் சிறப்புப்பற்றித் திருக்குறளைம், நாலடியாரையும் அடிப்படையாகக் கொண்டு "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்ற பழமொழி தோன்றி நிலவி வருகிறது.

### நான்மணிக்கடிகை

விளம்பிநாகனார் பாடிய நீதி நூல் இது. மணி போன்ற நான்கு கருத்துக்களை உடையது இதுபற்றிக் கூறுகையில் கல்விதான் உயர்ந்த உலகமாகிய பேரின்ப வீட்டை அடைவதற்கு அடிப்படையாக உள்ளது. மாசறக்கற்றோன் அவை என்னும் கடலைத் தாண்டுவான் என்று கூறுகிறது.

"கற்பக் கழிமடம் அ.:.கும் மடம.:.க
புறகந்தீ்ந் திவ்வுலகிற் கோள் உணரும்" என்கிறது.

### திரிகடுகம்

இது நல்லாதனார் இயற்றிய நூலாகும். சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய முப்பொருள் மருந்தாவது போல் இப்பாடல்கள் மூன்று கருத்துக்களை உடையது. கல்விக்கு

INTERNATIONAL RESEARCH JOURNAL OF INDIA
ISSN 2454-8707 VOLUME-II,ISSUE-IV, DEC -2016

உயிர்நாடியாக விளங்கும் ஆசிரியரைப் பற்றிக் கூறும்போது

கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை இல்லாத அவைக்களனும் - பாத்துண்ணும்
தன்மையிலாளர் அயலிருப்பும் இம்மூன்றும்

நன்மை பயத்த லில (பாடல் எண்.10) என்ற பாடலில் நெடுங்கணக்கு முதலியன கற்பிக்கும் ஆசிரியர் இல்லாத ஊரில் இருத்தலும், மாறுபட்ட பொருளை நீக்கும் கல்வி, கேள்விகளில் முதிர்ந்தவர்கள் இல்லாத சபையில் இருத்தலும், பகுத்துச் சாப்பிடும் குணம் இல்லாதவர் பக்கத்தில் இருத்தலும் ஆகிய இந்த மூன்றும் நன்மையைத் தருவன அல்ல, தீமை பயப்பன என்று கூறுகிறது.

## நாலடியார்

நீதி நூலான நாலடியாரிலு கல்வியின் சிறப்பு விளக்கப்பட்டுள்ளது. இந்நூல் சமண முனிவர்களால் பாடப்பட்டுத.

கல்வி கரையில் கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கின் பணிபல – தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவை நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.(பா.எண்.135)

என்ற பாடலில் கல்விக்குக் கரையில்லை. ஆனால் கற்பவர்க்கோ நாட்கள் கொஞ்சம்தான் ஆதலால் தண்ணீரை விட்டுவிட்டுப் பாலை அருந்தும் அன்னப்பறவை போல நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்கவேண்டும் என்று கூறுகிறது.

குஞ்சி அழகும் கொடும்தானைக் கோட்டு அழகும்
மஞ்சள் அழகும் அழகு அல்ல – நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவுநிலைமையால்
கல்வி அழகே அழகு (பா.எண்.131) என்ற பாடல் மூலம்

தலைமுடியால் வரும் அழகும், வளையும் முந்தானையில் உள்ள கரையினால் வரும் அழகும், மஞ்சள் பூசுவதால் வரும் அழகும் உண்மையான அழகுகள் ஆகா. உள்ளத்தில் நடுநிலை தவறாமல் வாழ்வதற்கு ஏற்ற கல்வியைக் கற்றிருப்பது ஒன்றே நிலையான அழகாகும் என்ற கருத்து பெறப்படுகிறது.

## நீதிநெறி விளக்கம்

குமரகுருபர சுவாமிகள் இயற்றிய நீதிநெறி "விளக்கம்" எனும் நூல் மனைவி போன்றது கல்வி என்று கூறுகிறது.

"கல்வியே கற்புடைப் பெண்டிர் அப்பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே தீம்கவியா சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மண் சுவை மண்ணுறுத்தும்
செல்வமும் உண்டு சிலர்க்கு" (பா.எண்.3)

கல்வி என்பது கற்புடைய மனைவியின் அறிவுபோல் நமக்கு உதவும். இயற்றுகின்ற பாடலின் இனிமை, அம்மனைவி மூலம் நாம்பெறும் நல்ல மகனுக்குச் சமம். கல்விச் செல்வமே ஒருவரை அறிவுடையோர் நிறைந்த இடத்தில் செல்வாக்காக இருக்கச் செய்யும்.

## விவேக சிந்தாமணி

விவேக சிந்தாமணியினைத் தொகுத்தவர் யார் என்பது தெரியவில்லை. இதில் பல

நூல்களிலிருந்து எடுத்த செய்யுள்களும், பிற்காலத்தே பலர் பாடிய தனிச் செய்யுள்களும் தொகுக்கப் பெற்றுள்ளன.

கல்வியின் சிறப்பையும், கற்றறிந்தும் அடக்கத்துடன் வாழவேண்டியதன் அவசியத்தையும் இந்நூல் பல இடங்களில் சுட்டிச் செல்கின்றது.

தீது இன்று அறிகிலாச் சேயர் என்செய்வார்
கோது அற அவரைநன்னெறி யில் கூட்டிடாது
ஏதங்கள் அவர் முன் செய்து இழிவைக் கற்பிக்கும்
தாதைதாய் புதல்வர்க்குச் சத்து ருக்களே (இரண்டாம் பாகம் பா.எண்.4)

என்ற பாடலில் இது தீமை, இது நன்மை என்று பகுத்தறியாமல் மனம் சென்ற வழியில் செல்லும் மக்கள் தம் குற்றம் நீங்குவதற்கு என்ன செய்வார்கள்? தாம் பெற்ற குழந்தைகளுக்கு நல்லறிவு கற்பித்தல் ஒன்றே பெற்றோர்களின் கடமையாகும் எனும் கருத்து கூறப்பட்டுள்ளது.

நன்னூல் கூறும் ஆசிரியரது இலக்கணம்

தொல்காப்பியத்துக்குப் பின் எழுந்த பவணந்தி முனிவரின் நன்னூல் அனைவரும் விருப்பத்துடன் கற்று வந்த நூலாகும். பவணந்தி முனிவர் சமணர்.

இந்நூல் நல்லாசிரியரின் இலக்கணத்தைக் கூறும் போது,
நிலமை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைப னூலுரை யாசிரி யான்னே (பா.எண்.26)

என்ற செய்யுளில் பல நூல்களிலே பழகிய தேற்றமும், நூற்பொருளை மாணவர் எளிதில் உணரும்படிச் சொல்லும் வல்லமையும் உலகநடையை அறியும் அறிவும் உயர்வாகிய குணங்களும் உடையவரே நூல் கற்பிக்கும் ஆசிரியராவார் என்கிறது.

## மாணாக்கனது வரலாறு

அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லிக் குடமா பெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடை மா ணாக்கர் (பா.எண்.38)

அன்னம் பாலையும், நீரையும் வேறு பிரித்துப் பாலை மாத்திரம் குடித்தல் போல்வர் முதல் மாணாக்கர்.

பசு மிகுந்த புல்லை மேய்ந்த பின்பு வேறு இடத்தில் அமர்ந்து அசைபோடுதல் போல முதல் மாணாக்கர், ஆசிரியரைக் கண்டால், நிறையக் கேட்டுக் கொண்டு, பின்பு ஓரிடத்தில் சென்று சிறிது சிறிதாக சிந்திப்பான்.

இடை மாணாக்கர் கிளி தனக்குக் கற்பித்த சொல்லையன்றி வேறொன்றையும் சொல்ல மாட்டாமை போல்வர் ஆவார்.

கடை மாணாக்கர் ஆடு ஒரு செடியிலே தழை நிறைந்திருந்தாலும் வயிறு நிறைய மேயாது செடி தோறும் போய் மேய்தல் போல இவர்கள் ஆசிரியரிடம் கற்றுக்கொள்ளாது பலரிடம் போய்ப் பாடம் கேட்பர்.

## முடிவுரை

தமிழ் இலக்கியங்கள் கல்வியையும், ஆசிரியரையும் உயரிய இடத்தில் வைத்து பாராட்டியமை, அவர்கள் கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளித்துள்ளனர் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளமுடியும்.

கல்வியால் மட்டுமே உலகை மாற்ற முடியும் என்கின்ற எக்காலத்துக்கும் பொருந்தும் உண்மையைத் தமிழ் இலக்கியங்கள் தெள்ளிதின் விளக்குவதை அறிய முடியும்.

துணைநூற் பட்டியல்

1. நன்னூல், ஆறுமுக நாவலர், ராம் பிரசுரம், சென்னை.
2. ஔவையார் அருளிய நீதி நூல்கள், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
3. நீதிநெறி விளக்கம், மாணிக்கம் (உரையாசிரியர்), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
4. விவேகசிந்தாமணி, மாணிக்கம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
5. நாலடியார் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.
6. திரிகடுகம் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.
7. நீதிக்களஞ்சியம், ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை.